**மத்திய அதிவேகபாதை செயற்திட்டம் பகுதி - II - 2018**

---

மத்திய அதிவேகபாதை செயற்திட்டம் பகுதி II இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

2015 ஜூலை 08 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்திற்கு வந்த போதான அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. வாகன பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு கிரயம் ஆகியவற்றினை குறைத்தல், போக்குவரத்து நேரம், விபத்து மற்றும் பொருளாதார அபிவிருத்தி சமூக மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பயணிகள் முயற்சி போன்றவற்றினை கொண்ட மீரிகம தொடக்கம் குருநாகல் வரையான அதிவோப்பாதை பகுதியின் 39.29 கிலோமீற்றர்களினை நிர்மானிப்பதனூடாக பகுதிகளுக்கிடையில் உயர் இயக்கத்தினை உறுதிசெய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 148,521 மில்லியனானதுடன் அதனை உள்நாட்டு அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் மற்றும் உள்நாட்டில் செயற்படும் சர்வதேச வங்கிகள் என்பவற்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களினூடாக இலங்கை பொதுதிறைசேரியினால் நிதியளிக்க தீர்மானிக்கப்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கையானது 2016 திசெம்பரில் கையொப்பமிடப்பட்டிருந்தது மேலும் செயற்பாடுகள் 2017 சனவரியில் அரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019 ஜூலையில் பூர்த்தியாக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த ரூபா 429 மில்லியன் தொகையான காணி சுவீகரிப்பிற்கான இழப்பீடுகள் மீதான வட்டி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறை மதிப்பீடு. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இக் கிரயம் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் முறையாக இணைக்கப்படும். | வருட முடிவில் உள்ளவாரான நிதி நிலைமை நிதிக் கூற்றுக்களில் பிரதி பலிக்கப்பட்டிருக்க வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

04 ஒப்பந்தப்பொதிகளாக பிரிக்கப்பட்டு உள்நாட்டு ஒப்பந்ததாரரின் கூட்டமைப்பு ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்த அதிவேகப்பாதையின் பகுதி II இன் நிர்மான வேலைகள் 2017 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், அதிவேகப்பாதையின் கட்டுமான வேலைகள் 38 சுரங்கப்பாதைகள், 06 மேல்பாதைகள், 12 பாலங்கள், 36 வயடாக்கள் (Viadact) மற்றும் 106 கீழ் வாய்க்கால் பாலம் போன்றவற்றை கொண்டுள்ளதுடன் அதில் 19 சுரங்கப்பாதைகள் மற்றும் 72 கீழ்வாய்க்கால் பாலங்களின் நிர்மான வேலைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. ஏனைய கட்டுமான வேலைகளின் செயலாற்றல் உரிய திகதியில் வடிவமைப்பு கட்டத்திலேயே காணப்பட்டது. ஒப்பந்த பூர்த்தியாக்களின் எதிர்பார்க்கப்பட்ட திகதிகள் நிர்மான தளங்களினை வசப்படுத்தி கையளிப்பதில் தாமதம் மற்றும் விலைத்தளம்பல் மற்றும் தாமதக்கட்டணங்கள் மீதான மேலதிக கிரயங்களின் சாத்தியமான அதிகரிப்புடனான வடிவமைப்புக்கள் மற்றும் வரைபடங்களை

தயாரித்தல் போன்ற பல்வேறு காரணங்களினால் 135 நாட்கள் தொடக்கம் 181 நாட்கள் எனும் வீச்சிலான 02 நிகழ்வுகளில் மாற்றியமைக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு அனுமதியளிக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்களினூடாக பொதுதிறைசேரியினால் நிதியளிக்கப்பட்ட ரூபா 148,520 மில்லியன் தொகையான மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில், மொத்தமாக ரூபா 59,510 மில்லியன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 காணி சுவீகரிப்பின் மீதான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| காணி சுவீகரிப்பு திட்டத்தின் பிரகாரம், 786 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 4,778 மத்திய அதிவேகப்பாதையின் பகுதி II இன் கீழ் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 6,305 மில்லியன் தொகையான இழப்பீடு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3,419 காணித்துண்டுகளை சுவீகரிக்க செலுத்தப்பட்டிருந்தது. மேலம், காணி சுவீகரிப்பின் செயற்பாடுகள் 2018 ஜூன் அளவில் பூர்த்தியாக்க தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் மிதான உத்தியோகத்தர்களிற்கான ஊக்குவிப்புக்கள் மற்றும் ஏனைய செலவுகள் ரூபா 101.5 மில்லியன் ஏற்பட்டிருந்தது. | காணி சுவீகரிப்பு செயற்பாடுகளை பூர்த்தியாக்கலில் தாமதம் காரணமாக மேலதிக கிரயங்களிற்கு சாத்தியம். | கணக்காய்வு அவதானிப்பு உண்மையிலேயே சரி. காணி சுவீகரிப்பானது பல்வேறு மானில முகவர்களினாலான ஒரு கூட்டு முயற்சி அவர்கள் இவ் வேலைகளை அவர்களின் உரிய வழமையான கடமைகளிற்கு மேலாக இதனை செய்தனர். அனைத்து காணி சுவீகரிப்பு செயற்பாடுகளும் பூர்த்தியாக்குவதற்கான 18 மாத காலப்பகுதியானது காணி சுவீகரிப்பிற்கு அவர்களினால் வழங்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலானது இருப்பினும், இவ் முகவர்களினாலான வெறுப்புடைய வல்லமையான முயற்ச்சி, அறியாமை, எதிர்ப்பு, தயக்கம் மற்றும் பொது மக்களின் முறையீடு போன்ற பல்வேறு நடைமுறை சிரமங்கள் தாமதங்களிற்கான காரணங்களாகவிருந்தன. | காணி சுவீகரிப்பு செயலாற்றலை விரைவுபடுத்த ஏனைய நிறுவனங்களின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்படல் வெண்டும். |